அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலையை குடிசைத் தொழிலாகச் செய்பவர்களுக்கு, கூட்டுறவுத் துறை மூலமாகச் செய்பவர் களுக்கு, இந்த வரி விதிப்பைக் குறைத்து, அப்படிப்பட்ட தொழிலில் அவர்கள் அதிக அளவில் ஈடுபட அரசு ஆவன செய் யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப் பினர் அவர்களின் உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

மதுரை பால்வள நிறுவனம்.

*வினா எண். 527—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்வள நிறுவனத்தில் சென்ற ஆண்டு (1978-79) ஏற்பட்ட இழப்பு (loss) எவ்வளவு ?

(ஆ) அதற்கான காரணங்களை அரசு ஆய்ந்து மேற் கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மதுரை பால்வள நிறுவனத்தில் சென்ற ஆண்டு (1978-79) இழப்பு ஏதும் ஏற்பட வில்லை.

(ஆ) வினாவிற்கு இடம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இழப்பு ஏதும் இல்லை என்கிற பதிலைத் தந்து இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆயினும், மஸ்தூர் போன்றவர்களுக்கு 2·85 ரூபாய் கூலியும், மற்றவர்களுக்கு 4 ரூபாயும் கொடுக்கப்படுகிறது என்றும் சொல் லப்படுகிறது. அதேபோன்று, சொசைடிகளில் இருந்து வாங்கும் பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 1.35 கொடுக்கப்படுகிறது என்றும், விற்கும் விலை ரூபாய் 2.10 என்றும் இருப்பதால், லாபம் எவ்வளவு கிடைத்து இருக்கிறது என்கிற தகவலை அமைச்சர் அவர்கள் தருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, இது பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக் கேள்வி போடுமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இழப்பு இல்லை என்று சொல்லிய காரணத்தால், அந்தக் கணக்குகளை வைத்துக்கொண்டுதான் சொல்லியிருப்பார்கள் என்று நான் கருதினேன், இப்போது வேலை நிறுத்தம் நடந்துகொண்டு இருக்கிற நேரத்தில் அங்கே வேலை செய்து வருகிற தொழிலாளர்கள் ரூபாய் 4 பெற்றுக்கொண்டு இருக்கிற நேரத்தில், வெளியே இருந்து புதிதாக எடுத்த ஆட்களுக்கு ரூபாய் 10 கொடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டு இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மதுரை பால்வள நிறுவனத்தில் தற்போது வேலைநிறுத்தம் இல்லை. வேலைநிறுத்தம் இல்லாமல் சரியாக வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, மதுரை பால்வள நிறுவனத்தில் ஏராளமான வெண்ணெய், நெய் போன்றவைகள் அதிகாரிகளின் கவனக்குறைவால் வீணாகி, அவை குழிதோண்டி புதைக்கப்பட்டதாக அரசுக்கு புகார் வந்திருக்கிறதா ? அப்படிப் புகார் வந்திருந்தால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, என்னிடத்திலே தரப்பட்டிருக்கிற விவரங்களில் அந்தத் தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஏதாவது விவரம் இருந்தால், கொடுத்தால், அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

காஞ்சீபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை.

* வினா எண். 528—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை வளர்ச்சிக்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : 1969 ஆம் வருடம் காஞ்சீபுரம் ஒரிக்கை தொழிற்பேட்டை 4 வாடகை தொழிற் கூடங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. 4 தொழிற்கூடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில்கள் நடைபெற்று வருகின்றன.